# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கிறீஸ்துவுக்கான இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1981, ஏப்ரல் மாதம் 8 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**அரசினர்** *ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1981**, *ஏப்ரல் மாதம்* 10 ஆந் *தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் *பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : சதம் 65** தபாற் செலவு : சதம் 50

1981 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கிறீஸ்துவுக்கான இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

[1981, ஏப்ரல் மாதம் 8 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 31/80

**கிறீஸ்துவுக்கான இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்கத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

“இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்கம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, சொல்லப்பட்ட சங்கத்தினால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறக்கொண்டு நடாத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் என இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : **முன்னுரை.**

சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாகக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கிறீஸ்துவுக்கான இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப்பெயர்.**

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “சங்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கிறீஸ்துவுக்கான இலங்கை கம்பஸ் திருப்பணி சங்கத்தின் அப்போதைக்கான தேசியப் பணிப்பாளரும், ஆலோசனைச்சபை உறுப்பினர்களும், அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும், “கிறீஸ்துவுக்கான இலங்கை கம்பஸ் திருப்பணி சங்கம்” என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாதல் வேண்டும், (இது இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக்குறிப்பீடுசெய்யப்படும்). அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் வழக்குத்தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் திருத்தவும் முழுத்தகத்துவமும் அதிகாரமும் அது உடையது. **கிறீஸ்துவுக்கான இலங்கைக் கம்பஸ் திருப்பணி சங்கத்தைக் கூட்டிணைத்தல்.**

3. (1) கூட்டுத்தாபனம், பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :— **கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள்.**

(அ) கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக் கிணங்க நியமிக்கப்படவேண்டிய தேசியப் பணிப்பாளர் ஒருவர், அத்துடன்

(ஆ) அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபன விதிகளுக் கிணங்க காலத்துக்குக் காலம், தேசியப் பணிப்பாளரினால் நியமிக் கப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்ட ஆலோசனைச்சபை ஒன்று.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆலோசனைச் சபையின் உறுப் பினர்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும்நேரத்தில் உள்ள சங்கத்தின் உறுப்பினர்களாதல் வேண்டும். அதாவது—

(அ) வண. ஆனந்த பெரேரா—தேசிய பணிப்பாளர்
(ஆ) திரு. கொட்வின் பெரேரா
(இ) திருமதி. ரூபி த மெல்
(ஈ) திரு. ராஜ்குமார் கருணாரத்தினம்
(உ) திரு. ராஜன் ஹென்ஸ்மன்
(ஊ) திரு. லின் லுவிஸ்

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

4. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இயேசு கிறிஸ்துநாதரின் நற்செய்தியைப் பரப்புவதில் மற்றவர் களுடன் பங்குகொள்ளுதல் ;

(ஆ) எல்லாத் திருச்சபைகளுடனும் ஏனைய கிறிஸ்துவத்தொகுதியின ருடனும் இணைந்து செயலாற்றுதல் ;

(இ) அவர்களது விசுவாசம் பற்றிய ஆழ்ந்த அறிவைக் கிறிஸ்தவர்க ளுக்குப் புகட்டுதல் ;

(ஈ) பிராந்தியப் பயிற்சி நிலையமொன்றை ஏற்பாடுசெய்தலும் பிராந் திய மாநாடுகளை நடாத்துவதற்கு ஒழுங்குசெய்தலும் ; அத் துடன்

(உ) மேலேயுள்ள குறிக்கோள்களின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய வேறெல்லாச் செயல்களை யும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

5. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனை யேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமான வாறான, அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்த கைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்ய வும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுதற்கும், கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல் லது சேகரித்தற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்தற்கும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

6. (1) உறுப்பினரின் பொதுக்கூட்டமொன்றில் அதில் வாக்களிக்கும் உறுப்பினரின் தேவையான வாக்குப்பெரும்பான்மை கொண்டு, கூட்டுத் தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் எனக் காலத்துக்குக் காலம் விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதே விதமான கூட்டத்தில், அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம். கூட்டுத்தாபன விதிகள்.

(2) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் வலுவிலுள்ள சங்கத்தின் விதிகள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் அல்லது அதன் ஊழியர் ஒருவர், இச்சட்டத்திலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விசுவாச அறிக்கையைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என்று கையொப்பமிட்டு கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கும்வரை தமது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது. விசுவாச அறிக்கை.

8. இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் சங்கத்துக்கு இருந்து வந்த எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய எல்லா ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும். சங்கத்திடமிருந்து செல்மதியாக வுள்ளனவும் அதற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

9. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனையின், கொடையின், நன்கொடையின் அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாகும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத்தத்துவத்துடனும் வைத்திருக்கப்படலும் வேண்டும். அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தேசியப் பணிப்பாளரின் முன்னிலையிலும் அல்லது அவர் இல்லாதிருப்பின் அவருக்காகச் செயலாற்றவென எழுத்தில் அவரினால் பெயர்குறிப்பிடப்பட்ட உறுப்பினர் ஒருவரின் முன்னிலையிலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் இன்னுமோர் உறுப்பினரின் முன்னிலையிலும் அல்லாது, எத்தகைய சாதனம் எதிலும் கூட்டுத்தாபனத்தின் இலச்சினையைப் பொறிப்பதற்கான நடவடிக்கை முறை.

பொறிக்கப்படலாகாது; அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்ருக அச் சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ் விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடு தலுக்குத் தனி வேருனதாதல் வேண்டும்.

**குடியரசின தும் மறுபேர் களினதும் உரி மைகளைப் பேணுதல்.**

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளை யேனும், ஏதேனும் அரச அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர் களும் தவிர்ந்த, வேறு எவரேனும் ஆளின் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

## அட்டவணை

### விசுவாச அறிக்கை

(பிரிவு 7)

எமது நம்பிக்கையின் ஒரே அடிப்படை விவிலியமாகும்; பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகிய அறுபத்தாறு பிரிவுகளைக் கொண்டுள்ள விவிலியமானது ஆண்டவரின் எழுத்திலான தவரு வார்த்தையாகும். பரிசுத்த ஆவியினுல் அது அபூர்வமானமுறையிலும், வாய்மொழிமூலமும், முழுமையாகவும் தூண்டப்பட்ட தென்றும், மூலக் கையெழுத்துப் பிரதிகளில் பிழையின்றி எழுதப்பட்டதென் றும் நாம் நம்புகிருேம். விவிலியம் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களின்மீதும் அதுவே அதியுயர்ந்த இறுதி அதிகாரம் உடையதாகும்.

உண்மையான கிறிஸ்தவர்கள் எல்லோரிடையேயும் வரலாற்று முறைப்படி பொது உடன்பாடு இருந்துள்ள பெருமளவிலான கோட்பாட்டுப் போதனைகளை நாம் ஏற்றுக்கொள்கிருேம். எமது இயக்கத்தின் தனித்தன்மையினதான தொண்டு காரணமாக, ஏனைய கோட்பாட்டு விடயங்கள்மீது பற்றுறுதிக்கான சுதந்திரத்தை அனுமதிக்க நாம் விரும்புகிருேம்; எனினும் ஏதேனும் பொருள் விளக்கம் விவிலியத்தின் அடிப்படைமீது மட்டுமே இருத்தல் வேண்டுமென்ப துடன், அத்தகைய பொருள்விளக்கம் எதுவும், ஆண்டவர் எம்மைத் தொண்டு புரிவதற்கு அழைத்துள்ள பணியைத் தடைசெய்யும் ஒரு பிரச்சினையாக இருத் தலுமாகாது.

அடிப்படை விவிலியப் போதனைகளில் எமக்குள்ள நம்பிக்கையைப் பின்வரு மாறு வெளிப்படையாக உறுதிப்படுத்துகிருேம்:—

1. உண்மையான ஒரே ஆண்டவர் மூன்று ஆட்களான—பிதா, குமாரன், பரி சுத்த ஆவி என்ற வடிவத்தில் நித்தியமாக இருக்கிருர். இவர்களில் ஒவ் வொருவரும் தெய்வத் தன்மைகள் எல்லாவற்றையும் தனிமனிதத் தகைமையின் சிறப்புப் பண்புகளையும் சம அளவில் கொண்டுள்ளனர்.

2. இயேசு கிறிஸ்துவே ஆண்டவர். அவர் பரிசுத்த ஆவியினுல் அவாது தெய் வீகக் கருத்தரிப்பின் மூலமும் அவரது மாசில்லா உற்பவத்தின்மூலமும் மாமிசமாகிய ஜீவனுள்ள வார்த்தை. ஆகவே, அவர் முழுநிறைவான கடவுளும், என்றென்றும் ஓர் ஆளிலேயே ஒருங்கிணைக்கப்பட்ட உண்மை யான மனிதத்தன்மை உடையவரும் ஆவார்.

3. அவர் மாசற்ற வாழ்க்கை வாழ்ந்தார் என்பதுடன், மனிதருக்குப் பதிலாக சிலுவையில் மாண்டதன்மூலம் அவர்களின் பாவங்களைத் தன் னிச்சையாகவே ஈடுசெய்தார். இதன்மூலம் அவர் தெய்வ நீதியைத் திருப்திப்படுத்தியதுடன் அவரிலேதான் நம்பியிருக்கும் எல்லோருக் கும் இரட்சிப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

4. அவர் வாழ்ந்து மரித்தபொழுது அவருக்கிருந்த அதே உடலோடு (மகிமை பெற்றபோதிலும்) மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்.

5. அவர் அதே உடம்பைக் கொண்டவராகவே பரலோகத்துக்கு எழுந்தருளி, பிதாவான ஆண்டவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கின்றார். ஆங்கு, அவர், ஆண்டவருக்கும் மனிதருக்கும் இடையேயான ஒரு நடுவராக விருந்து தமக்குச் சொந்தமானவர்களுக்காக இடைவிடாது பரிந்து பேசுகின்றார்.

6. மனிதன் ஆதியில் ஆண்டவரின் சாயலாகவே படைக்கப்பட்டான். ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமையினால் பாவஞ்செய்தான்; அதன்மூலம் தன்னைப் படைத்தவரினால் தள்ளிவைக்கப்பட்டான். அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வீழ்ச்சி எல்லாமனிதரையும் தெய்வக் கண்டனத்துக்குட்படுத்தியது.

7. மனிதனின் இயல்பு கறைப்பட்டுள்ளதனால் ஆண்டவரை மகிழ்விக்க அவன் முழுதாக இயலாதவனாய் இருக்கின்றான். பரிசுத்த ஆவியினால் புது வாழ்வூட்டப்படுதலும் மீளப்புதுமனிதன் ஆக்கப்படுதலும் ஒவ்வொரு மனிதனினதும் தேவையாகவுள்ளது.

8. மனிதனின் இரட்சிப்பு முழுமையாக ஆண்டவரின் தன்னிச்சையான அருளாலே ஒழிய முழுமையாகவோ பகுதியளவிலோ மனிதனின் முயற்சியினாலோ சமயச்சடங்குகளின் திறனினாலோ அல்ல. தமது இரட்சிப்புக்காக கிறிஸ்துவிலேயே விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு ஆண்டவர் தமது நேர்மையைக் குறித்துக்காட்டி அதன்மூலம் அவரது பார்வையில் அவர்களுக்கு மன்னிப்பளிக்கிறார்.

9. கிறிஸ்துவைத் தமது இரட்சகர் என்று நம்பும் அந்த நேரத்திலிருந்து இரட்சிப்பைக் கட்டாயமாகப் பெறுவர் என்ற உறுதிப்பாடு பரிசுத்த ஆவியில் மறுபிறப்புப் பெற்ற எல்லோரினதும் சிறப்புரிமையாகும். இந்த உறுதிப்பாடு எந்தவகையினதுமான மனிதப் பண்பின் அடிப்படையினதானதல்ல, ஆனால் பரிசுத்த ஆவியின் சாட்சியின்மூலம் உருவாக்கப்படுகின்றது; ஆண்டவரின் எழுத்திலான வார்த்தையில் அவரது வாக்குமூல உறுதியை, நம்பிக்கையுள்ளவரின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்துகின்றார்.

10. கிறிஸ்துவை வெளிப்படுத்தி மகிமைசெய்யவும் கிறிஸ்துவின் இரட்சிப்பை மனிதருக்குத் தொடர்புபடுத்தவும் என பரிசுத்த ஆவி இந்த உலகத்துக்கு வந்துள்ளார். அவர், பாவிகளைத் தமது குற்றங்களை உணரவைத்து கிறிஸ்துவினண்டை அவர்களை இழுக்கின்றார்; அத்துடன் அவர்களுக்குப் புதுவாழ்வு அளித்து, ஆன்மீகப் பிறப்பு ஏற்படும் நேரத்திலிருந்து அவர்களின் இருதயத்தில் தொடர்ந்திருந்து மீட்புநாள்வரை அவர்களுக்குத் தனி அடையாளம் இடுகின்றார். நம்பிக்கையுள்ளவனின் வாழ்க்கையில் அவரது முழுமையும் சக்தியும் கட்டுப்பாடும் விசுவாசத்தின்மூலம் பெறப்படுகின்றன.

11. நம்பிக்கையுள்ளவன் ஒவ்வொருவனும், மாமிசத்தின் இச்சையை நிறைவேற்றாது ஆண்டவரின் மகிமைக்குப் புகழ்கொடுக்கும்வண்ணம் பரிசுத்த ஆவியின் சக்தியில் அவ்வாறு வாழும்படி கோரப்படுகிறான்.

12. இயேசு கிறிஸ்துவே திருச்சபையின் தலைவராவார். இரட்சிக்கும் விசுவாசத்தின் மூலம் அவருடன் இணைக்கப்பட்டுள்ள உயிர்வாழ்கின்றவர்களும் இறந்துள்ளவர்களுமான மனிதரைக்கொண்டுள்ள அவரது உடம்பே திருச்சபையாகும்.

13. தொழுவதற்கெனவும் சமயவினைகளில் பங்குபற்றுவதற்கெனவும், விவிலிய நூலின்மூலம் நற்சான்றளிக்கப்படுவதற்கெனவும் பரஸ்பர ஊக்கமளிப்பதற்கெனவும் கிரமமாக ஒன்றுகூடும்படி ஆண்டவர் அறிவுறுத்துகின்றார்.

14. உடல் இறக்கும்போது நீதிமான் உடனடியாகத் தேவனோடு நித்திய, உணர்வுநிலையுடைய தோழமையை எய்தி, என்றுமழியா மகிமைக்கும் ஆசீர்வாதத்துக்கும் தமது உடம்பு மீள உயிர்ப்பிக்கப்படும்வரை காத்திருப்பான்.

15. உடல் இறக்கும்போது பாவியானவன் உடனடியாகத் தேவனோடு நித்திய, உணர்வுநிலையுடைய பிரிவை எய்தி என்றுமழியா தீர்ப்புக்கும் கண்டனத்துக்கும் தமது உடம்பு மீளஉயிர்ப்பிக்கப்படும்வரை காத்திருப்பான்.

16. வரலாற்றையும் ஆண்டவரின் நித்திய திட்டத்தையும் நிறைவுசெய்வதற்கு இயேசு கிறிஸ்து தாமாகவே கண்காணக்கூடியவாறு தமது உடலோடு பூமிக்கு மீண்டும் வருவார்.

17. இயேசு கிறிஸ்து நாதர், உலகெங்கும் நற்செய்தியைப் பிரகடனப்படுத்தும்படியும் ஒவ்வொரு நாட்டினருக்கும் போதிக்கும் படியும் நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோருக்கும் ஆணையிட்டுள்ளார். "எம்மை நேசித்து எமக்காகத் தமதுயிரைக் கொடுத்தவருக்கு" எம்மை முழுமையாக அர்ப்பணித்து, எல்லா இலௌகிக அவாக்களையும், சொந்த அவாக்களையும் அந்த அர்ப்பணத்திலும் பார்க்க கீழானவையாகக் கருதுவதே அந்த மகா ஆணையை நிறைவேற்றுவதற்குத் தேவையானதாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500. கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.